TNVR070023482023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.62/2023
C.N.R.No.***TNVR070023482023***

------

B. சுப்புராஜ் .. வாதி

/எதிர் /

1. K. ராஜாராம்
2. K.பிரதாப்சிங்
3. K. தயாநந்த கணேஷ்
4. A. அமிர்தம் சூரிய பகவான்தாஸ்
5. A. அமர் பாபு
6. A. லெட்சுமி பிரசன்னா .. பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 20.04.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சேதுராமானுஜம், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீராம், அவர்கள் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், 4 முதல் 6 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

தபசில் சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தினையும், பாத்தியத்தையும்

எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க உத்தரவிட வேண்டியும், கடந்த 13.03.1990 அன்று 4 ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவணம் 576/1990—ஐ ரத்து செய்து செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டியும், இவ்வழக்கு செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதிகள் வழங்க உத்தரவிட வேண்டியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்—</u>**

**2.1.** தபசில் சொத்துக்களுக்குரிய உரிமம் முத்துலிங்கபுரம் கிராமத்தில் 1955 ம் ஆண்டு செட்டில்மெண்ட் நில பதிவேடு ஆவணத்தில் வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் பெயரில் இருந்து வருகிறது. மேற்படி தபசில் சொத்தின் பட்டா வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் பெயரில்தான் உள்ளது. தபசில் சொத்து புஞ்சை நிலமானதால் வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் உயிருடன் இருந்த காலம் வரையில் விவசாயம் செய்து வந்துள்ளார். தபசில் சொத்து மற்றும் இதர சொத்துக்களும் பிரிக்கப்படாத இந்து கூட்டு குடும்ப சொத்தாக வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ணநாயக்கர் மற்றும் அவரது தாயார் லட்சுமியம்மாள் பெயரில் ஆண்டனுபவித்து வந்துள்ளனர். பாலகிருஷ்ண நாயக்கர் மற்றும் அவரது தாயார் லட்சுமியம்மாள் இறந்த பின்னரும் அவர்களின் ஒரே வாரிசான வாதி விவசாயம் செய்து வந்துள்ளார்.

2.2. இந்நிலையில் தொடர்ச்சியாக பருவ மழை பொய்த்த காரணத்தினால் விவசாயம் செய்ய முடியாமல் வறுமையான சூழலில் வாழ்வாதாரத்திற்காக வாதி குடும்பத்துடன் கோயம்புத்தூர் சென்று குடியேறி தொழில் செய்து பின்னர் அவ்வப்போது குடும்ப நிகழ்வுகளுக்கு மட்டும் அவரது சொந்த ஊரான எட்டுர்வட்டம் வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். தபசில் சொத்து வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கருக்குப் பாத்தியப்பட்டு அவர் பெயரில் செட்டில்மெண்ட்

பதிவேட்டில் பதிவாகி அவருடைய ஆளுகையிலும், பாத்தியத்திலும் இருந்து வந்து அவர் கடந்த 13.03.1987—ல் காலமான பின்னர் அவருடைய தாயாரும் கடந்த 11.11.1989 அன்று காலமான பின்பு அவரின் ஒரே வாரிசு என்ற அடிப்படையில் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டு அவருடைய அனுபவத்திலும், பா்தியத்திலும் இருந்து வந்தது.

2.3. இந்நிலையில், வாதியின் குடும்பம் பூர்வீக ஊரில் இல்லாமல் கோயம்புத்தூர் சென்று குடியேறிவிட்டதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தனக்கு எவ்விதத்திலும் பாத்தியம் இல்லாத தபசில் சொ்தினை 4 முதல் 6 பிரதிவாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பிரதி பிரதியோஜனமாக சாத்தூர் சார்பதிவாளர் ஆவண எண்.576/1990 மூலம் மோசடியாக கிரையம் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி மோசடி கிரைய ஆவணத்தில் மேற்படி 4 முதல் 6 பிரதிவாதிகள் தபசில் சொத்து 4ம் பிரதிவாதியின் தகப்பனார் காலம் சென்ற அமிர்தம் கோட்டைய நாயுடு அவர்களுக்கு தபசில் கண்ட சொத்துக்களும் வேறு சில சொத்துக்களும் சேர்த்து பாத்தியப்பட்டு அவர் காலமான பின்னர் 4ம் பிரதிவாதிக்கும் அவரின் சகோதரர்களுக்கும் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டு தபசில் சொத்து மேற்படி 4ம் பிரதிவாதிக்கு கிடைத்து தீர்வை முதலியன செலுத்தி 4ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு சர்வசுதந்திர பாத்தியமாக அனுபவம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

2.4. 4ம் பிரதிவாதி கூறியதுபோல் 4ம் பிரதிவாதி தகப்பனாருக்கு தபசில் சொத்து பாத்தியம் என்பதற்கு எவ்விதமான வருவாய்துறை ஆவணங்கள் ஏதுமில்லை. மேலும் தபசில் சொத்து மற்றும் வேறு சில சொத்துக்களுக்கு 4ம் பிரதிவாதியும் அவரின் சகோதரரும்சேர்ந்து வாய்மொழி பாகம் செய்ததாக சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். மேற்படி மோசடி கிரையம் பதிவு செய்வதற்கு முன்பு 4ம் பிரதிவாதி பெயரிலோ அல்லது அவரின் தகப்பனார் பெயரிலோ தபசில் சொத்தைப் பொறுத்து கிரைய ஆவணமோ, பட்டாவோ, தீர்வை

ரசீதோ, சிட்டா அடங்கல் பதிவேடுகள் எதுவும் கிடையாது. மேற்படி தபசில் சொத்தினை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துன் பிரதிவாதிகள் கூட்டு சதி செய்துள்ளனர். கடந்த 2022ம் ஆண்டு ஜனவரி முதல் வாரம் வாதி தபசில் சொத்து மற்றும் வேறு சில சொத்துக்களை விற்பனை செய்வதற்காக வில்லங்க சான்று பார்க்கும்போதுதான் தபசில் சொத்து மோசடியாக 4ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மோசடியாக கிரையஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ள விபரம் தெரிய வந்துள்ளது. தபசில் சொத்து எவ்விதத்திலும் 4ம் பிரதிவாதிக்கு சட்டப்படி பாத்தியப்படாத நிலையில், மோசடியாக மேற்படி விவரங்கள் நன்கு தெரிந்திருந்தும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பிரதிபிரயோஜனமாக கிரையம் பெற்றது சட்டத்திற்கு புறம்பான செயலாகும். எனவே வழக்கு தாக்கல்.

**3.** 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தாலும், 4 முதல் 6 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப் பட்டுள்ளனர்.

4. **<u>சாட்சிகள்</u>**

வாதி தரப்பில் சுப்புராஜ் என்பவர் வா.சா.1. ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

**6.** வாதியானவர் பிரதிவாதிகளுக்கு எதிராக, வழக்குச் சொத்து தனக்கே தனித்துச் சர்வசுதந்திரமாகப் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தன் அமைதியான அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டியும், மேலும் 4–ஆம் பிரதிவாதி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு 13.03.1990 அன்று எழுதிப் பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவண எண்:576/1990 செல்லத்தக்கதல்ல, அது செல்லாது மற்றும் இல்லா நிலையது என விளம்புகை

செய்யக் கோரியும் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

6.1. 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தாலும்,4 முதல் 6 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப் பட்டுள்ளனர். எனவே இவ்வழக்கு ஒருதலைப்பட்ச விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

6.2. வழக்கு அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தாலுகா, இ.முத்துலிங்கபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்: 271/4, பரப்பளவு 0.79.5 ஹெக்டேர் (1 ஏக்கர் 97 சென்ட்) கொண்ட புஞ்சை நிலமானது (இனி 'வழக்குச் சொத்து' எனக் குறிப்பிடப்படும்) வாதியின் பூர்வீக மற்றும் பரம்பரைச் சொத்தாகும். மேற்படி சொத்து வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் அவர்களின் பெயரில் 1955–ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் பதிவேட்டிலும், வருவாய்த்துறை வழங்கிய பட்டா பாஸ் புக்கிலும் பதிவாகி, அவரது ஆளுகையிலும் அனுபவத்திலும் இருந்து வந்தது.

6.3. வாதி, அவரது தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் மற்றும் தாயார் லட்சுமியம்மாள் ஆகியோர் ஓர் கூட்டு இந்து குடும்பமாக (HUF) வாழ்ந்து வந்தனர். வழக்குச் சொத்து புஞ்சை நிலமாக இருந்ததாலும், தொடர்ச்சியாகப் பருவமழை பொய்த்து வறுமைச் சூழல் ஏற்பட்டதாலும், வாதியின் குடும்பத்தினர் வாழ்வாதாரத்திற்காக 1989–ஆம் ஆண்டு கோயம்புத்தூருக்குக் குடிபெயர்ந்தனர். எனினும், பூர்வீக ஊரில் நடக்கும் சுப, அசுப நிகழ்ச்சிகளுக்கு மட்டும் வாதி அவ்வப்போது வந்து சென்றுள்ளார்.

6.4. வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் 13.03.1987 அன்றும், தாயார் லட்சுமியம்மாள் 11.11.1989 அன்றும் எவ்வித உயிலும் எழுதாமல் காலமானார்கள். அவர்களின் ஒரே சட்டப்பூர்வ வாரிசு என்ற அடிப்படையில், வாதி இச்சொத்தின் தனித்த சர்வசுதந்திர உரிமையாளராகித் தொடர்ந்து தன் பாத்தியத்தில்

வைத்துள்ளார்.

6.5. இந்நிலையில், வாதியின் குடும்பம் பூர்வீக ஊரில் இல்லாததைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வழக்குச் சொத்திற்கு எவ்வித சட்டப்பூர்வ உரிமையும் இல்லாத 4–ஆம் பிரதிவாதி (தன் மைனர் பிள்ளைகளான பிரதிவாதிகள் 5 மற்றும் 6–க்கு காப்பாராக இருந்து), 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்: 576/1990–இன் படி ஒரு மோசடியான கிரைய ஆவணத்தை 13.03.1990 அன்று ஏற்படுத்தியுள்ளார். அதில், இச்சொத்து தன் தகப்பனார் கோட்டைய நாயுடுவுக்குப் பாத்தியப்பட்டது என்றும், வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் தனக்குக் கிடைத்தது என்றும் கற்பனையான கதைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

6.6. கடந்த 2022–ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் வாதி தன் அவசரக் குடும்பத் தேவைக்காகச் சொத்தை விற்பனை செய்ய வில்லங்கச் சான்று பார்த்தபோதே இம்மோசடி தெரியவந்தது. பிரதிவாதிகளுக்குச் சொத்தில் எவ்வித மூலப்பத்திரமோ, பட்டாவோ, தீர்வையோ இல்லாத நிலையில், கூட்டுச் சதி செய்து இம்மோசடி ஆவணத்தை உருவாக்கியுள்ளனர். எனவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. **பரிசீலனைக்குரிய வினாக்கள்–**

> மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிரமோத் ஷ்ராஃப் எதிர் மோகன் சிங் (Pramod Shroff v. Mohan Singh) 2026 INSC 378 – என்ற வழக்கில் தீர்ப்பளித்துள்ளபடி, பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சமாக வைக்கப்பட்ட சிவில் வழக்குகளிலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 20 விதி 4–இன் படி, நீதிமன்றமானது வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து,

சான்றுகளை ஆய்ந்து, தீர்விற்கான வினாக்களைக் கட்டாயம் எழுப்பி, அதற்குரிய காரணங்களுடன் கூடிய தீர்ப்பை வழங்கக் கடமைப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், இந்த வழக்கின் இறுதித் தீர்விற்காக இந்த நீதிமன்றத்தால் பின்வரும் வினாக்கள் எழுப்பப்படுகின்றன:

8. வாதிக்குச் சாதகமாகச் சம்மன்கள் தகுந்த முறையில் அனுப்பப்பட்டு, பிரதிவாதிகள் நீதிமன்றத்தை நாடாமல் புறக்கணித்தது சட்டப்படி நிலைநாட்டப்பட்டுள்ளதா?

8.1. வழக்குச் சொத்து வாதியின் தகப்பனாருக்குப் பாத்தியப்பட்டது என்பதும், அவரது மறைவிற்குப் பின் வாதியே அதன் முழுமையான சர்வசுதந்திர உரிமையாளர் என்பதும் சான்றாதாரங்கள் மூலம் நிறுவப்பட்டுள்ளதா?

8.2. 4–ஆம் பிரதிவாதி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு எழுதிப் பதிந்து கொடுத்துள்ள 13.03.1990 நாளிட்ட கிரைய ஆவணம் (எண்: 576/1990) மோசடியானது மற்றும் செல்லாதது என்ற வாதியின் வாதம் ஏற்புடையதா?

9. வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் அவருக்குக் கிடைக்கத்தக்கதா?

10. **தீர்வு –**

10.1. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 5 விதிகள் 10, 11 மற்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை நேரடியாகவோ அல்லது அவர் மறுக்கும் பட்சத்தில் அவரது இருப்பிட முகவரியின் வெளிப்பக்கக் கதவில் ஒட்டுவதன் மூலமோ முறைப்படி சார்பு செய்யப்பட வேண்டும். இவ்வழக்கின் கோப்புகளைப் பரிசீலிக்கும் போது, ஆந்திர மாநிலத்தில் வசிக்கும் பிரதிவாதிகள் 4 முதல் 6 மற்றும் சாத்தூரில் வசிக்கும் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்குச்

சம்மன்கள் சட்டப்படியான மாற்று வழிமுறைகள் மூலமாக முறைப்படி சார்பு செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது. மேற்கூறிய 1 முதல் 3 பிரதிவாதிகள் அழைப்பாணையை பெற்றும் நீதிமன்றத்தில் வழக்கை மேல்நடத்த தவறியதாலும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பத்திரிக்கை விளம்பரம் செய்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் அவர்கள் மீதான ஒருதலைப்பட்ச நடைமுறை சட்டப்படி செல்லத்தக்கதே ஆகும்.

10.2. வாதி தன் தரப்பு வாதத்தை மெய்ப்பிக்கத் தன்னை வா.சா.1 ஆகப் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்து விசாரித்துக் கொண்டுள்ளார். மேலும், தன் தரப்பில் 5 முக்கிய சான்றாவணங்களைக் குறியீடு செய்துள்ளார்.

10.3. வா.சா.ஆ.1 (10.12.1973 நாளிட்ட பட்டா நில உடைமை குறிப்பேடு – அசல்): இச்சான்றாவணம் வழக்குச் சொத்தான சர்வே எண்: 271/4–இன் உரிமம் வாதியின் தகப்பனார் பாலகிருஷ்ண நாயக்கர் பெயரிலேயே இருந்து வந்துள்ளது என்பதைத் தொடக்க நிலையிலேயே ஐயமின்றிக் காட்டுகிறது.

10.4. வா.சா.ஆ.5 (செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் – சான்றிட்ட நகல்): 1955–ஆம் ஆண்டு நில அளவைச் செட்டில்மெண்ட் பதிவேட்டில் 'அழகர்சாமி நாயக்கர் மகன் பாலகிருஷ்ண நாயக்கர்' என்றே உரிமையாளர் பெயர் பதிவாகியுள்ளது. இதன் மூலம் வழக்குச் சொத்து வாதியின் குடும்பத்தின் பூர்வீகச் சொத்து என்பது முதன்மைச் சான்றுகளால் நிலைநாட்டப்படுகிறது.

10.5. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 (இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் – அசல்): பாலகிருஷ்ண நாயக்கர் 13.03.1987–ல் இறந்துவிட்டதையும், வாதி சுப்புராஜ் மட்டுமே அவரது ஒரே சட்டப்பூர்வ வாரிசு என்பதையும் இந்த ஆவணங்கள் உறுதி செய்கின்றன.

10.6. மறுபுறம், வா.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள 13.03.1990 நாளிட்ட மோசடி கிரையப் பத்திர நகலை (ஆவண எண்: 576/1990) உற்றுநோக்கின், அதில் 4–ஆம் பிரதிவாதி தன் தகப்பனார் அமிர்தம் கோட்டைய

நாயுடுவிடமிருந்து வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் இச்சொத்து கிடைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், பிரதிவாதிகளின் தகப்பனாருக்கோ அல்லது 4–ஆம் பிரதிவாதிக்கோ வழக்குச் சொத்தில் எவ்வித உரிமையும், வருவாய்த்துறை ஆவணப் பதிவுகளும் இருந்ததில்லை என்பதை வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

10.7. "பொதுவாக விற்பவருக்குச் சொத்தில் நல்லுரிமை இல்லாதபோது வாங்குபவருக்கு அது மாற்றப்படாது" (Nemo dat quod non habet) என்ற சட்ட விதியின்படி, 4–ஆம் பிரதிவாதியால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் சட்டப்படி செல்லாததும், இல்லா மற்றும் செல்லா நிலையது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. .

10.8. அரசுத் தரப்பு மற்றும் வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் வாதியின் தகப்பனார் பெயரிலேயே உள்ளதாலும், வாதி அவரது ஒரே வாரிசு என்பதாலும், வழக்குச் சொத்தின் மீது வாதிக்கு மட்டுமே முழுமையான சர்வசுதந்திர பாத்தியம் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இது குறித்து பிரதிவாதிகள் மறுத்துரைத்து அவர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் உரிய முறைப்படி எடுத்து வைக்காத காரணத்தினால் தபசில் சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தினையும், பாத்தியத்தையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், கடந்த 13.03.1990 அன்று 4ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவணம் 576/1990–ஐ ரத்து செய்து செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11. **<u>இறுதி முடிவு</u>**

இறுதியாக வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, தபசில் சொத்து வாதிக்கு

மட்டுமே பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தினையும், பாத்தியத்தையும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும் கடந்த 13.03.1990 அன்று 4ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மோசடியாக பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவணம் 576/1990–ஐ ரத்து செய்து செல்லாது மற்றும் இல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்–**

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 – சுப்புராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.12.1973 | பாலகிருஷ்ண நாயக்கர் பெயரிலுள்ள பட்டா நிலை உடைமை குறிப்பேடு |
| வா.சா.ஆ.2 | 13.03.1990 | 4ம் பிரதிவாதி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த மோசடியான கிரைய ஆவண எண்.576/1990 சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.3 | 14.07.2016 | பாலகிருஷ்ண நாயக்கரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.4 | 20.01.2017 | வாரிசு சான்றிதழ் அசல். |
| வா.சா.ஆ.5 | 16.03.2001 | பாலகிருஷ்ண நாயக்கர் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்–</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்
அ.வ.எண்.62/2023
நேரிய/வரைவு
தீர்ப்புரை
நாள் – 24.04.2026.